සැළසිනෙ
செலசினே
SELACINE
SELACINE TELEVISION INSTITUTE

# 2023

## வருடாந்த அறிக்கை

கௌர வெகுசன ஊடக அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2023**

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (1) பிரிவுக்கமைய 2023.09.30 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினெ தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.



கே.எம்.எம்.மஹேஷ் பண்டார
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தூரநோக்கு, பணி, நோக்கம் | 05 |
| தலைவரின் மதிப்புரை | 07 |
| பொது முகாமையாளரின் மதிப்புரை | 09 |
| நிறுவனத்தின் தகவல்கள் | 10 |
| நிர்வாக கட்டமைப்பு 2023 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள் | 11 |
| நிதியறிக்கை - 2023 | 15 |
| ஐந்தொகை | 17 |
| வருமான அறிக்கைகள் | 18 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 19 |
| நிதியறிக்கைக்கான கூற்று | 20 |
| 2023 ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் | 29 |

# தூரநோக்கு, பணி, நோக்கம்

## பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம்.

## தூரநோக்கு

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்



## நோக்கம்

நிதி நிலமையினை உயர்த்துதல்

சந்தை இலாபத்தினை உயர்த்துதல்

நிறுவன காலாசாரத்தினை உயர்த்துவதற்கான உபாயங்களை செயற்படுத்தல்

நிறுவன ஊழியர்கள் மற்றும் தலைவர்களை வளர்ச்சியுறச் செய்தல்



# தலைவரின் மீள்ப்பார்வை

நான் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பித்த முதலாவது ஆண்டாகிய 2023 ஆம் ஆண்டுக்குரிய இவ் ஆண்டறிக்கைக்காக இவ்வாறு செய்தியினை வெளியிடுவது தொடர்பில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் கடந்த 41 ஆண்டு காலத்தினுள் வெவ்வேறு இடையூறுகளின் மத்தியில் பயனித்தாலும் 2023 ஆம் ஆண்டு அரசியல் புயல்கள், போறாட்டங்கள், தீவிர எரிபொருள் பற்றாக்குறை, டொலரின் பெறுமதி ரூபாயுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தல், தயாரிப்பு மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரித்தல் போன்ற பிரச்சிணைகளினால் 2023 ஆம் ஆண்டு எதிர்ப்பார்த்த இலாபத்தினை ஈட்ட இயலவில்லை.
அவ்வாறான நிலையில் ஏற்படவிருந்த நஷ்டத்தினை குறைப்பதற்கு நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளை இயன்றளவு குறைத்து நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

2023 ஆம் ஆண்டினுள் செலசினே நிறுவனத்தினை சட்டமயமாக்கல் நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.



கே.எம்.எம்.மஹேஷ் பண்டார
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்



# பொது முகாமையாளரின் மீள்ப்பார்வை

1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட செலசினே தொலைக்காட்சி நிறுவனம் திட்ட நிறைவேற்று பிரிவாக செயற்படுத்தப்பட்டு பின்னர் வெகுசன ஊடக அமைச்சின் பிரிவாக நீண்ட காலம் செயற்பட்டு வந்துள்ளது.

மிக நீண்ட காலமாக பணிப்பாளர் சபையின் கீழ் இந் நிறுவனம் செயற்பட வாய்ப்பிருந்தும் தனிநபர் சட்டத்தன்மை இருக்காமையினால் 2011 ஆம் ஆண்ளவில் தனியார் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பமானது. உயர் முகாமைத்துவத்தின் மாற்றத்தின் அடிப்படையில் இடை இடையே இச் செயற்பாடு நிறுவனத்தின் பிரதான செயற்பாடாக முன்வந்து இருந்தபோதும் இறுதி வரை பயனிக்க முடியவில்லை.

ஆயினும் 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதமளவில் இச் செயற்பாட்டினை மீண்டும் ஆரம்பித்ததுடன் நீண்ட செயன்முறைக்குப் பின்னர் 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20 ஆம் திகதி பொது பதிவாளர் திணைக்களத்தில் செலசினே மீடியா சொலூஷன் (தனியார்) நிறுவனம் எனும் பெயரில் 100 மூ பங்குகள் திரைசேறிக்கு சொந்தமான நிறுவனமாக பதிவு செய்யக்கிடைத்தமை பாரிய வெற்றியாகும்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் புதிய நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன் 42 ஆண்டு கால வரலாற்றினைக் கொண்ட இந் நிறுவனம் இதுவரை சட்டத்தன்மை வாய்ந்த நிறுவனமாக ஆரம்பமாகியது.

இச் செயற்பாட்டுக்கு முன்னாள் தலைவர் ஹரித் குணவர்தன அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டினை நன்றியுடன் நினைவுப்படுத்துவதுடன் வெவ்வேறு காலங்களில் பல்வேறு தியாகங்களுடன் பயனித்த இந் நிறுவனம் மேலும் நீண்ட காலம் இலாபகரமான நிறுவனமாக திகழ எதிர்ப்பார்க்கின்றேன்.

டப்ளியூ.எல்.ஏ.கே.ஏ. குணதிலக
பொது முகாமையாளர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

# நிறுவனத் தகவல்கள்

## பெயர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

## சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 1989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினெ நிறுவனம் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்).
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொது நிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.



## நிறுவனத்தின் பொறுப்புக்கள்

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்.
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
    - i. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
    - ii. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
    - iii. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்.

# நிர்வாகக் கட்டமைப்பு - 2023

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| ஹரித் குணவர்தன | - | தலைவர் |
| கே.எம்.எம்.மஹேஷ் பண்டார | - | தலைவர் |
| டபிள்யூ.எல்.ஏ.கே.ஏ. குணதிலக | - | பொது முகாமையாளர் |

## நிர்வாகிகள்

| | | | |
|---|---|---|---|
| நதிக்கா கமநாயக்க | - | கணக்காளர் | (வே.பா) |
| கானேசி தஹநாயக்க | - | முகாமையாளர் | (மனிதவளம் மற்றும் நிர்வாகம் வே.பா) |
| சுனந்த வீரசிங்க | - | முகாமையாளர் | (ஒலி / ஒளி தயாரிப்பு) |
| அக்போ அமரசேகர | - | முகாமையாளர் | (வாடிக்கையாளர் சேவை) |
| நலீன் அலஹகோன் | - | முகாமையாளர் | (ஊடகப்பிரிவு) |
| சுஜித் புஷ்பகுமார | - | முகாமையாளர் | (வரைகலைப்பிரிவு) |
| பிரபாத் கஹாதுவ ஆராச்சி | - | முகாமையாளர் | (நிகழ்ச்சிகள்) |

## தணிக்கை

அரச கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்



## வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

## தொடர்பு விபரங்கள்

| | | |
|---|---|---|
| **முகவரி** | - | இல. 380/57, சரன வீதி, கொழும்பு 07 |
| **தொலைபேசி** | - | 011-4320777, 011-4061586 |
| **தொலைநகல்** | - | 011-2058229 |
| **மின்னஞ்சல்** | - | selacine@gmail.com |
| **இணையத்தளம்** | - | www.selacine.lk |

## வடிவமைப்பு மற்றும் கிராபிக்ஸ் பிரிவு

போட்டித்தன்மை வாய்ந்த சந்தையினை வெற்றிக் கொள்வதற்கு இக் காலத்திற்கும் எதிர்க்காலத்திற்கும் பொருந்தும் வகையிலான தரம் வாய்ந்த வடிவமைப்புக்களை வெளியிடுவதன் மூலம் நிறுவனத்தின் எதிர்க்காலத்திற்காக நடவடிக்கை மேற்கொள்வது இப் பிரிவின் பொறுப்பாகும். இதுவரை அது வெற்றிகரமான குழுவாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

வடிவமைப்பு மற்றும் கிராபிக் பிரிவின் எமது அணி உயரிய பங்களிப்பினையும் அர்ப்பணிப்பினையும் வழங்கி விளம்பர அறிவித்தல்கள், பத்திரிகை அறிவித்தல்கள், பில் போர்ட், துண்டுப் பிரசுரங்கள் உட்பட அனைத்து அச்சிடல் நடவடிக்கைகளையும், வெளி விளம்பர நடவடிக்கைகள் உள்ளடங்களாக வடிவமைப்பு நடவடிக்கைகளை நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுக்க உறுதிப்பூண்டுள்ளனர்.

எமது பிரிவின் நடவடிக்கைகள் அலுவலக நேரத்தினுள் மட்டுமின்றி, அதன் பின்னரும் நடைபெறுகின்றது. கடந்த கொவிட் தொற்று நோய் பரவல் காலப்பகுதியில் எமது சகோதரர்கள் உயரிய சக்தியினை வழங்கி அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற அச்சிடல் மற்றும் சமூக ஊடகங்களினூடாக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அவ்வாறு நடந்தமையின் காரணமாக நிறுவனத்தினை முன்னேற்றத்தினை நோக்கி ஈட்டிச் செல்ல ஒன்றினைந்து செயற்பட முடிந்தது.

செயற்பாடின்றியும் இலாபம் ஈட்டாமலும் காணப்பட்ட அதிவேக அச்சிடல் நடவடிக்கைகள் பிரிவு எமது கிராபிக்ஸ் பிரிவுடன் ஒன்றிணைக்கப்பட்டதன் பின்னர் செயற்திறன் மற்றும் இலாப நிலைக்கு கொண்டுவரப்பட்டு, புதிய பணியாளர்களை அதிகரித்துக் கொள்ள முடிந்தது.

எமது பிரிவின் 3னு வடிவமைப்புக்கு திறன் வாய்ந்தவர்கள் இருந்தமையினால் எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப மாதிரிகளை வழங்குவதனால் அவர்கள் அவற்றினால் திருப்தி அடைந்து வடிவமைப்பு நடவடிக்கைகள் அனைத்தினையும் எமது நிறுவனம் வாயிலாக மேற்கொள்ள முன்வந்தனர் என்பதனையும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றோம்.

வருடாந்த வருமான இலக்குகளை அடையத் தேவையான உயரிய பங்களிப்பினை வழங்கி புதிய நிர்வாகத்துடன் கைக்கோர்த்து, திறன்வாய்ந்த ஆலோசனைகளுக்கமைய மிகவும் செயற்திறனுடனும் அர்ப்பணிப்புடனும் இருப்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## ஊடகப் பிரிவு

எங்கள் பிரிவு வாடிக்கையாளரின் விளம்பரத் தேவைகளைக் கண்டறிந்து செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களில் விளம்பரப்படுத்த ஏற்பாடு செய்கிறது. விளம்பர உத்திகளைத் திட்டமிடுதல், தரப்பினருடனான பேச்சுவார்த்தை நடத்துதல் மற்றும் போட்டி விளம்பரக் கட்டணங்களைப் பெறுதல், விளம்பர அறிக்கைகளைத் தயாரித்தல், செய்தியாளர் சந்திப்புகளை ஒருங்கிணைத்தல், ஊடகங்களில் சமீபத்திய விளம்பர வாய்ப்புகளை ஆய்வு செய்தல் மற்றும் ஊடக வல்லுநர்களுடன் நீண்ட கால உறவுகளை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

2023 ஆம் ஆண்டிலும், ஊடகத்துறையின் திட்டமிடல் மூலம் அதிக வருமானத்தைப் பெறுவதற்கு எமது பிரிவு செயற்பட்டது. எங்கள் பிரிவு உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான, மூலோபாய திட்டமிடுபவர்கள், ஊடகப் போக்குகள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டவர்கள்.

கடந்த ஆண்டை விட வரும் ஆண்டில் எங்கள் நிறுவனத்திற்கு அதிக வருமானத்தை ஈட்ட எங்கள் குழு தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இறுதியாக நாங்கள் புதிய வாடிக்கையாளர்களை தங்கள் முதலீடுகளில் அதிகபட்ச வருமானம் பெற எங்களுடன் சேர அழைக்கிறோம்.

## சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை பிரிவு

2023 ஆம் ஆண்டில், வாடிக்கையாளர் பிரிவு 163,237,759.00 ரூபாய் விற்பனை பங்களிப்பை ஈட்டியுள்ளது. இது நாம் எதிர்பார்த்த 800 மில்லியன் ரூபாவை விடக் குறைவாக இருந்தாலும், அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விளம்பர நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் குறைப்பினால் இது முக்கியமாகப் பாதிக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த ஆண்டு நாங்கள் நிரந்தரமாக எந்த வியாபாரத்தினையும் பெறவில்லை மற்றும் அனைத்து சேவைகளும் சந்தைப்படுத்தல் மூலம் விற்கப்பட்டன. எமது பிரிவு சம்பாதித்த வணிக வாய்ப்புகள். அதன்படி, கடந்த ஆண்டை விட விற்பனை அதிகரிப்பு காணப்படுகிறது. இவ்வருடம் பெருந்தொகையான புதிய வாடிக்கையாளர்களை இந்த நிறுவனத்திற்கு ஈர்க்க முடிந்ததுடன், அரச துறையில் 02 விசேட செயற்றிட்டங்களுக்கான வடிவமைப்பு விளக்கங்களைச் செய்ததன் காரணமாக எதிர்வரும் வருடத்தில் பணிகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்துடன் இணங்கியுள்ளோம். விற்பனைத் பிரிவின் விரிவாக்கத்துக்குத் தேவையான பணியாளர்களை பணியமர்த்த பணிப்பாளர் சபை அனுமதி அளித்தது. எதிர்வரும் ஆண்டில் தனியார் துறையினரின் ஊக்குவிப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும், இதனால் எதிர்கால விற்பனை நடவடிக்கைகள் பயனுள்ளதாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு

நாட்டின் பொருளாதார நெருக்கடியுடன், செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் பொருளாதார ரீதியாக மிகவும் சவாலான ஆண்டாக 2023 ஆம் ஆண்டு இருந்ததுடன் அவ்வாண்டின் மனித வள மற்றும் நிர்வாகத் பிரிவின் பணிகள் பின்வருவனவாகும்.

- ஜூன் 23, 2023 அன்று (இருபத்து மூன்று), செலசினே மீடியா சொலூஷன்ஸ் தனியார் நிறுவனம் சட்டமயமாக்கப்பட்டமை, செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 42 ஆண்டுகால வரலாற்றில் ஒரு பெரிய திருப்புமுனையைக் குறிக்கிறது.
- இந்த வருடத்தில் எமது நிறுவனத்தின் நிதி நிலைமை பலவீனமாக இருந்த போதிலும், அனைத்து ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வித தாமதமும் இன்றி வழங்கப்பட்டன.
- நிதி நிலைமை பலவீனமாக இருந்தாலும், ஊழியர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் மருத்துவக் காப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- சலசைன் மீடியா சொல்யூஷன்ஸ் தனியார் நிறுவனத்தை சட்டப்பூர்வமாக்குவதன் மூலம் வணிகத்தின் முகத்திற்கு ஏற்ற வகையில் ஊழியர்களை மறுசீரமைக்க பணியாற்றுதல்.
- ஊழியர்களின் தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட உள் பதவி உயர்வுகளை வழங்குதல்

## தயாரிப்பு பிரிவு

1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியன்று ஒரு சிறிய நீரூற்றாக தொடங்கிய, செலசினே தொலைக்காட்சி நிறுவனம் ஒரு வீடியோ நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனமாக, சுற்றியுள்ள சூழலில் இருந்து நீர் துளிகளை சேகரித்து, முழு சுற்றுச்சூழல் அமைப்பையும் செழிக்கச் செய்து, முன்னோக்கி இழுத்தது. ஓடை, ஆறு, மலை, குன்று போன்ற தடைகளைத் தாண்டி ஓடும் போதுதான் அதன் அழகு வெளிப்பட்டது. உற்பத்தி நிறுவனமும் அவ்வப்போது வரும் பல்வேறு தடைகள் மூலம் உற்பத்தி நிறுவனமாக முன்னேறியது. ஒரு நதி எப்போதும் அதன் சுற்றுப்புறங்களால் வளர்க்கப்படுகிறது. இது பல கிளைகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு திட்டமிடப்பட்ட உற்பத்தி நிறுவனத்தில் வேறு பல துறைகளும் சேர்க்கப்பட்டன. துளியாய் ஓடிய செலசினே நதியாக மாறியது. செலசினே என்று பெயரிடப்பட்ட இந்த நதியின் தலையானது தயாரிப்பு துறையின் ஊட்ட நீரோட்டமாக முன்னோக்கி இழுக்கப்படுகிறது. இந்த நதி மற்ற முக்கிய துணை நதிகளால் இணைக்கப்பட்டது. பெரிய நதியாக மாறியது. தயாரிப்பு பிரிவு இந்த பெரிய நதியின் ஒரு சிறிய நீரோடையாக இருந்தது.

2023 ஆம் ஆண்டில், எங்கள் தயாரிப்புத் துறை மக்கள்தொகை மற்றும் புள்ளிவிவரத் துறையின் 2023 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுப் பள்ளி திட்டத்தின் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட ஒன்றரை மணிநேர ஆவணப்படத்தின் முழுமையான விளம்பரத்தை மேற்கொண்டது. குடும்ப சுகாதாரத் திணைக்களத்தினால் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் அதற்கான 32 விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களை உருவாக்க முடிந்தமை எங்களின் சாதனையாகும், 2013 இல் நிறுவனத்திற்கான 06 குறுகிய வேலைத்திட்டங்களும் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கான 03 அறிக்கை நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டது. இப்போது நாம் சிறு நீரோடையாக இருந்தாலும், இந்தப் பெரிய நதியின் நீர் ஆதார தயாரிப்பு காரணியாக இருப்பதால் பெருமை கொள்கிறோம்.



## நிதிப் பிரிவு

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் அனைத்து நிதி விவகாரங்களும் எங்கள் நிதிப் பிரிவால் செய்யப்படுகின்றன. ஆண்டு தொடர்பான கணக்குகளை உரிய திகதியில் வழங்குவது நிதிப் பிரிவின் முக்கிய பணியாகும், மேலும் 2023 ஆம் ஆண்டிற்கான தொடர்புடைய கணக்குகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்க முடிந்தது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட காலதாமதங்களை எல்லாம் சரிசெய்து, இந்த ஆண்டு உரிய திகதியில் கணக்குகளை வழங்க முடிந்திருப்பது பெரிய சாதனையாகும்.

நிதிப் பிரிவு அனைத்து செயல்பாடுகளையும் திறம்பட செயல்படுத்த புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையினால் வேலைகளை திறம்பட செய்ய முடிந்தது.

அனைத்து கணக்குகளும் அரசாங்க கணக்கியல் தரநிலைகளின்படி செய்யப்படுகின்றன மற்றும் சப்ளையர்களுக்கு நிலுவையில் உள்ள பல கடன்கள் சரியான நேரத்தில் செலுத்தப்பட்டன. நிலுவைத் தொகையை வசூலிக்க பொருத்தமான திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, தணிக்கை வினவல்கள் குறைக்கப்பட்டன.

கணக்காய்வளார் நாயகத்தின் கருத்தின்படி, 2014 முதல் 2022 வரையிலான பொதுக் கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான சூழ்நிலையைக் காட்டுவதால், நிதிப் பிரிவால் செலசினே தொலைக்காட்சிக்கு நற்பெயர் கிடைத்தது.

வரவிருக்கும் ஆண்டில், அரசாங்கத்தின் கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க சரியான திகதியில் கணக்கு அறிக்கைகளை வழங்குவதன் மூலம் அனைத்து நிதி விவகாரங்களுக்கும் துல்லியமான மற்றும் திறமையான சேவையை நிதித்துறை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கொள்முதல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவு

இந்நிறுவனத்தில் 9 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட நிகழ்வு முகாமைத்துவ துறை, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்கும் துறையாகும். தற்போது, நிகழ்வு மேலாண்மைத் துறையுடன் கொள்முதல் துறையைச் சேர்ப்பதன் மூலம், இந்தத் துறையானது நிறுவனத்திற்கு திறமையான மற்றும் பயனுள்ள பணியைச் செய்ய முடிந்தது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதுமையான திட்டங்களை முன்வைப்பதன் மூலம் சர்வதேச மட்டத்தில் நிகழ்வுகளை நிர்வகிக்க முடிந்தது, குறிப்பாக நிகழ்வுகள் துறை மூலம். இலங்கையின் வரலாற்றில் அழியாத மைல்கற்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எமது நிறுவனம் தாமரை கோபுரம், ஐக்கிய நாடுகளின் வெசாக் கொண்டாட்டம், பத்திரிகை விருதுகள், ஜனாதிபதியின் திரைப்பட விருதுகள் போன்ற மிக முக்கிய நிகழ்வுகளை உருவாக்குவதில் முன்னணியில் நிற்க முடிந்தது.

மேலும், கொள்முதல் துறை இணைவதால், அரசு கொள்முதல் வழிகாட்டுதல்கள் தொடர்பாக சேவை வழங்குநர்கள் குறிப்பிடும் பணிகளுக்கு டெண்டர்களை அழைப்பதன் மூலம் தரமான மற்றும் செலவு குறைந்த சேவைகளை வழங்க முடிந்தது. பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து போட்டியிட்டு பயனுள்ள சேவையை வழங்குவதே இந்தத் துறையின் நோக்கமாகும்.

எதிர்காலத்தில், இந்தத் துறையானது புதுமையான முறைகளைப் பயன்படுத்தி சர்வதேச அளவிலான நிகழ்வுகளை ஏற்பாடு செய்து தனியார் மற்றும் பொதுத்துறை வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவையை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிறுவனத்தை திறமையான துறையாக மாற்றவும் எதிர்பார்க்கிறோம்.

# நிதியறிக்கை 2023

# ஐந்தொகை

**30 செப்டெம்பர் 2023 அன்று உள்ளவாறான**

| | குறிப்புகள் | 2023.09.30<br>ரூபா. | 2022.12.31<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | |
| சொத்து ஆதனங்கள், சாதனங்கள் | 02 | 13,246,475 | 13,391,548 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 02-A | 625,101 | 1,007,188 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **13,871,576** | **14,398,736** |
| **நடைமுறை** | | | |
| முதலீடுகள் | 03 | 22,943,243 | 15,847,321 |
| வியாபாரம் மற்றும் கிடைக்கவேண்டியவை | 04 | 320,911,880 | 327,186,162 |
| கிடைக்க வேண்டிய ஏனையவை | 05 | 2,189,509 | 2,148,332 |
| கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள பணம் | 06 | 4,185,876 | 14,141,553 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | **350,230,508** | **359,323,368** |
| **மொத்த சொத்துக்கள்** | | **364,102,084** | **373,722,104** |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | |
| **ஒப்புரவு** | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்/நட்டம் | | 79,768,955 | 98,127,028 |
| **மொத்த ஒப்புரவு** | | **79,768,955** | **98,127,028** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 07 | 13,815,264 | 18,092,000 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **13,815,264** | **18,092,000** |
| **நடைமுறை** | | | |
| வியாபாரமும், செலுத்தவேண்டிய ஏனையவையும் | 08 | 270,388,313 | 257,373,524 |
| பெற்றுக்கொண்ட முற்பணம் | | 129,552 | 129,552 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | **270,517,865** | **257,503,076** |
| **மொத்த ஒப்புரவு மற்றும் பொறுப்புக்கள்** | | **364,102,084** | **373,722,104** |

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரமும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமனங்களின் தேவையின் பிரகாரமும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர் - செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

இந்த நிதி அறிக்கை அமைத்தல் மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும் என்பதோடு அதற்காக பணிப்பாளர் சபையினால் கீழ் கையெலுத்திட்டப்பட்டுள்ளது.

தலைவர்
செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

# வருமான அறிக்கை

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த வருமான அறிக்கை இலங்கை ரூபாவின் படி**

| | குறிப்புகள் | 2023.09.30 ரூபா. | 2022.12.31 ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | **09** | **163,237,759** | **323,094,325** |
| நேர் செலவுகள் | **10** | (127,267,175) | (243,981,574) |
| **மொத்த இலாபம் / நட்டம்** | | **35,970,582** | **79,112,751** |
| ஏனைய வருமானம் | **11** | 4,282,416 | 5,267,201 |
| நிர்வாக மற்றும் ஸ்தாபனச் செலவுகள் | **12** | (52,876,360) | (88,891,095) |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | **13** | (4,709,514) | 7,949,229 |
| **நடைமுறையிலிருந்து இலாபம்** | | **(17,332,875)** | **(12,460,372)** |
| நிதிசார் செலவுகள் | **14** | (445,534) | (353,414) |
| ஏனைய செலவுகள் | **15** | (869,286) | (1,486,144) |
| **வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **(18,647,695)** | **(14,299,930)** |
| வருமான வரி | | - | - |
| **வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **(18,647,695** | **(14,299,930)** |



**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை நாணயத்தில் குறிப்பிடப்பட்டது**

| | | |
|---|---|---|
| 2023 ஜனவரி 1 இன் நிலவரப்படி இருப்பு | | **98,127,028** |
| வருடாந்திர சரிசெய்தல் | 17 | 289,622 |
| | | 98,416,650 |
| ஆண்டுக்கான நிகர லாபம் / நட்டம் | | (18,647,695) |
| 2023 செப்டெம்பர் 30 நிலவரப்படி இருப்பு | | **79,768,955** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2023.09.30<br>ரூபா. | 2022.12.31<br>ரூபா. |
|---|---|---|
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம் | (18,647,694) | (14,299,930) |
| **சீராக்கல்** | | |
| வட்டி வருமானம் | (3,006,454) | (3,654,726) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம் விதிகள் | 2,237,858 | 3,990,768 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 623,185 | 1,324,243 |
| அடகு கடன் ஒதுக்கீடு | 710,788 | 674,848 |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் | - | - |
| **தொழிற்படுமுதல் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **(19,503,893)** | **(11,964,797)** |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவையில் (அதிகரிப்பு/குறைவு) | 6,274,282 | 58,240,095 |
| வைப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்டவையில் (அதிகரிப்பு/குறைவு) | (41,177) | (392,145) |
| வியாபார கடன் மற்றும் பிற கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்) | 13,014,790 | (68,399,807) |
| முதலீடுகள் (அதிகரித்தல்/குறைவடைதல்) | - | - |
| கிடைக்கப்பெற்ற முற்பணம் (அதிகரித்தல்/குறைவடைதல்) | - | (73,626) |
| **செயற்பாட்டுக்கு (பயன்படுத்திய) பெறப்பட்ட காசு** | **19,247,896** | **(10,625,483)** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (4,599,423) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு** | **(14,648,471)** | **(10,625,483)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் கொள்வனவு | (1,710,700) | (545,890) |
| வட்டி வருமானம் | 3,006,454 | 3,654,726 |
| நிலையான வைப்புக்கள் | 7,396,417 | (7,097,093) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு** | **(6,100,663)** | **(3,988,257)** |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து உருவாகும் பணப்புழக்கம்** | | |
| அடகு கடன் ஒதுக்கீடு | 710,788 | (674,848) |
| தக்க வருவாய் பிழை திருத்தம் | 289,622 | 20,040,591 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து / பயன்படுத்திய தேறிய காசு** | **1,000,410** | **19,365,743** |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமமான தொகையில் அதிகரிப்பு / குறைவு** | **(9,955,674)** | **(7,212,805)** |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ) | 14,141,552 | 21,354,358 |
| **வருட முடிவில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)** | **4,185,877** | **14,141,552** |

குறிப்பு **A**

| | | |
|---|---|---|
| **நிதி மற்றும் பணத்திற்கு சமமானவை** | | |
| இலங்கை வங்கியின் தற்போதைய கணக்கு இலக்கம் - 2323299 | 502,824 | 880,486 |
| இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கு இலக்கம் - 2329765 | 26,033 | 93,963 |
| மக்கள் வங்கி 200100130005980 | 1,216,571 | (5,532,427) |
| மக்கள் வங்கி 200100110005980 | 2,390,449 | 18,699,530 |
| தயாரிப்பு முற்பணம் | 50,000 | - |
| | **4,185,877** | **14,141,552** |

# நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

**2023.09.30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

**1. பொதுவானவை**

1.1 நிறுவனத் தகவல்கள்

செலாசினெ தொலைக்காட்சி நிறுவனமானது (இதன் பின்னர் செலாசினே என்று அழைக்கப்படும்) 2019.02.26 ஆம் திகதி இல 2112/13 எனும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2022.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு 41 ஊழியர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

**2. கணக்கியல் கொள்கை தொடர்பில் முக்கிய அம்சங்களின் சாராம்சம்**

2.1 பொதுவான கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு

இவ் வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்ட கணக்குக் கொள்கைகளுடன் இணக்கப்பாடானதாக உள்ளது.

2.3 கடன் செலவுகள



கடன் செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எந்தத் தொகையும் மூலதனமாக்கப்படாது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**3. சொத்து மதிப்பிடுதலும், அவை மதிப்பிடும் அடிப்படையும்**

3.1 ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்

செலவு அல்லது அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

3.2 வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வைப் பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானைவும் என்பது கையிலுள்ள காசு மற்றும் கோரிக்கை வைப்புக்களையும், துரித கதியில் தெரிந்த பெறுமானத்தில்காசுக்கு மாற்றக்கூடியதாகவும், பெறுமான மாற்றத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கெதனையும் விளைவிக்காததும், கூடிய திரவத் தன்மையுடைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

3.4 தேய்மானம்

தேய்மானமானது ஒவ்வொரு சொத்தினதும் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலப் பகுதிக்குள்ளானவாறு நேர்கோட்டு முறையின் பிரகாரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள், குத்தகைக் காலப் பகுதியின் குறுகிய காலத்திற்கும், சமமான சொந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு காலப் பகுதிக்கும் ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்குரிய தேய்மான விகிதம் திருத்தப்பட்டுள்ளது.

சமகால மற்றும் ஒப்பீட்டளவு காலப் பகுதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு காலம் வருமாறு:

| | |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துதலும் | 10 வருடங்கள் |
| கணனி சாதனங்கள் | 05 வருடங்கள் |
| அலுவலக சாதனங்கள் | 10 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| புகைப்படக் கருவி, படமெடுக்கும் சாதனங்கள் | 10 வருடங்கள் |
| கணனி மென்பொருட்கள் | 10 வருடங்கள் |

3.5 நிலையான சொத்துக்களை அகற்றுதல்

2018 ஆம் ஆண்டில் சொத்துக்களை வாங்குவது அங்கீகரிக்கப்படாமல் விளக்கப்பட்டுள்ளது.

**4. பொறுப்புக்களும், ஒதுக்கீடுகளும்**

4.1 ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டியவை அல்லது கோரிக்கை அடிப்படையில் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் என்பன நடைமுறைப் பொறுப்புக்களென ஐந்தொகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின்னர் முடிவடையவுள்ள கடப்பாடுகள் நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 ஓய்வூதிய, நலன்புரி செலவுகள்

ஊழியர்கள் பிரதிலாபங்கள் - LKAS 19 (2006 இல் திருத்தப்பட்டது) ஊழியர் நலன்புரிக்கமைய சகல ஊழியர்களுக்கும் சேவையின் முதலாவது வருடத்திலிருந்து ஓய்வூதிய நலன்புரிகளுக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய தொடர்ச்சியாக 05 வருட சேவையினைப் பூர்த்திசெய்த பின்னரே ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஏற்புடையதாகிறது.

4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

நியதிச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடையவர்களாவார்கள். இந் நிறுவனமானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளின் 15% மற்றும் 3% க்கான தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கிறது.

**5 வருமானக் கூற்று**

5.1 மொத்த விற்பனவு

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அச்சிடுதல், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்..

5.2 வருமானம் இனங்காணல்

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.3 செலவு இனங்காணல்

வருமானக் கூற்றில் செலவுகளானது ஏற்பட்ட செலவுக்கும், வருமானத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கான உழைப்பிற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**6. சம்பந்தப்பட்ட நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்**

LKAS 24 நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் எந்தவொரு சம்பந்தப்பட்ட நபர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை.

**7. இருப்புநிலை தேதியில் நிகழ்வுகள் தொடர்பான பிந்தைய சரிசெய்தல் குறிப்புகள்**

7.1 நிதி அறிக்கையில் வெளிப்படுத்தப்படும் அல்லது சரிசெய்யப்பட வேண்டிய அளவு நிகழ்வுகள் இருப்புநிலை தேதிக்குப் பிறகு நிகழவில்லை.

**8. கடனாளிகளுக்கு *5%* பாதி கடனாக ஒதுக்கப்பட்டுள்ளது. (90 நாட்களுக்கு மேல் கடனாளிகளுக்கு)**

**9. பண மோசடி**

உரிய அதிகாரம் இல்லாமல், நலன்புரி கணக்கில் ரூ.11,988,000 ரூபாய் மதிப்பு வரவு வைக்கப்பட்டுள்ளது, இது தொடர்பாக நீதித்துறை மறுஆய்வு நிலுவையில் உள்ளதால், இது 2014 ஆம் ஆண்டு முதல் வர்த்தகம் மற்றும் வரவுகளின் கீழ் சேர்க்கப்பட்டது, ஆனால் இந்த ஆண்டு, ளுடுயுளு சட்டம் 37 மற்றும் 38 மற்றும் 89 பிரிவின் படி தக்கவைக்கப்பட்ட வருவாயுடன் சமரசப்படுத்தப்பட்ட குறிப்பாக இது வெளிப்படுத்தப்படுகிறது.

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**குறிப்பு - 02 - ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள்**

| | 31.12.2022 நாளுக்கு செலவு ரூபா. | ஒன்று சேர்த்தல் / மாற்றுதல் ரூபா | அகற்றுதல் / மாற்றுதல் ரூபா | 30.09.2023 திகதிக்கு செலவு ரூபா |
|---|---|---|---|---|
| **02.1 மொத்த சொத்துக்கள்** | | | | |
| தளபாடங்களும் பொருத்தலும் | 11,098,227 | - | - | 11,098,227 |
| கணனி சாதனங்கள் | 10,849,339 | 1,710,700 | - | 12,560,039 |
| அலுவலக சாதனங்கள் | 8,233,327 | - | - | 8,233,327 |
| மோட்டார் வாகனங்கள் | 7,835,824 | - | - | 7,835,824 |
| புகைப்படக்கருவி மற்றும் சாதனம் | 15,169,000 | - | - | 15,169,000 |
| | **53,185,717** | **1,710,700** | **-** | **54,896,417** |

| | 31.12.2022 நாளுக்கு செலவு ரூபா. | ஆண்டிற்கான இறுப்பு மாற்றம்/ மாற்றுதல் ரூபா. | அகற்றுதல் / மாற்றுதல் ரூபா. | 30.09.2023 திகதிக்கு இறுப்பு ரூபா. |
|---|---|---|---|---|
| **02. 2 தேய்மானம்** | | | | |
| தளபாடங்களும் பொருத்தலும் | 3,923,466 | 712,059 | - | 4,635,525 |
| கணனி சாதனங்கள் | 8,574,535 | 691,210 | - | 9,265,745 |
| அலுவலக சாதனங்கள் | 4,605,230 | 420,762 | - | 5,025,992 |
| மோட்டார் வாகனங்கள் | 7,835,824 | - | - | 7,835,824 |
| புகைப்படக்கருவி மற்றும் சாதனம் | 14,855,113 | 31,742 | - | 14,886,855 |
| | **39,794,168** | **1,855,773** | **-** | **41,649,942** |
| | **13,391,548** | | | **13,246,475** |
| **குறிப்பு - 02-A தொட்டுணர முடியாத சொத்துக்கள்** | | | | |
| கணக்கியல் மென்பொருள் | 3,389,000 | - | - | 3,389,000 |
| வலைப்பின்னல் அமைப்பு | 3,419,651 | - | - | 3,419,651 |
| | **6,808,651** | **-** | **-** | **6,808,651** |
| **நிலை மாறுதல்** | | | | |
| கணக்கியல் மென்பொருள் | 2,810,427 | 125,613 | - | 2,936,040 |
| வலைப்பின்னல் அமைப்பு | 2,991,037 | 256,473 | - | 3,247,510 |
| | **5,801,464** | **382,086** | **-** | **6,183,550** |
| | **1,007,187** | | | **625,101** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | குறிப்பு | 2023.09.30<br>ரூபா. | 2022.12.31<br>ரூபா. |
|---|---|---|---|
| **குறிப்பு - 03 - முதலீடுகள்** | | | |
| இலங்கை வங்கி - கணக்கு இலக்கம் 8162593 | | 500,000 | 500,000 |
| கடனாளி - இலங்கை சேமிப்பு வங்கி 83636019 | | 7,000,000 | 7,000,000 |
| இலங்கை வங்கி - கணக்கு இலக்கம் 84622785 | | 2,073,289 | 1,810,680 |
| மக்கள் வங்கி - கணக்கு இலக்கம் 2006001000068281 | | 6,369,954 | 5,536,641 |
| மக்கள் வங்கி - கணக்கு இலக்கம் 200600100007202-5 | | 1,000,000 | 1,000,000 |
| மக்கள் வங்கி - கணக்கு இலக்கம் 91158251 | | 3,000,000 | - |
| மக்கள் வங்கி - கணக்கு இலக்கம் 91357849 | | 1,000,000 | - |
| மக்கள் வங்கி - கணக்கு இலக்கம் 2006001000076511 | | 2,000,000 | - |
| | | **22,943,243** | **15,847,321** |
| **குறிப்பு - 04 - வியாபாரமும் கிடைக்க வேண்டியவையும்** | | | |
| வியாபார கடன்படுனர் | குறிப்பு **04.1** | 288,712,301 | 282,563,403 |
| பணியாளர் கடன் | குறிப்பு **04.2** | 1,800,666 | 1,813,822 |
| முற்பணக் கொடுப்பனவு | | 19,510,870 | 20,125,000 |
| கிடைக்கவேண்டிய காப்புறுதி தவணை | | - | 41,800 |
| தடுத்துவைத்த வரி | | 238,548 | 82,459 |
| நிதி சேவைக் கட்டணம் | | 3,599,744 | 3,599,744 |
| உபாலி செய்தித்தாள் நிறுவனம் | | 194,068 | 194,068 |
| மீளளிக்கக்கூடிய வைப்புகள் | குறிப்பு 04.3 | 5,581,100 | 5,544,100 |
| கிடைக்கவேண்டிய வங்கி வட்டி வருமானம் | | 361,895 | 390,138 |
| ஊழியர்களினால் பண மோசடி | | - | 11,988,000 |
| நானாவிதமாக கிடைக்கவேண்டியவை | | 82,891 | 63,151 |
| ஈ-மன்சல கட்டுப்பாட்டுக் கணக்கு | | 367,917 | 367,917 |
| செய்ய வேண்டிய செலவுகள் | | 3,600 | - |
| உற்பத்தி முற்பணம் (சிறந்தது) | | 223,280 | 137,400 |
| ஏனைய முற்பணம் (சிறந்தவை) | | 235,000 | 275,160 |
| | | **320,911,880** | **327,186,162** |
| **குறிப்பு - 04.1 - வியாபார கடன்படுனர்** | | | |
| வர்த்தக கடன்படுனர் | | 301,638,624 | 296,200,514 |
| குறைவான கலை - கடன் ரசீதுகள் | | (755,272) | (755,272) |
| கழிக்க - அறவிடமுடியாத கடனுக்கு ஏற்பாடு | | (12,171,051) | (12,881,839) |
| | | **288,712,301** | **282,563,403** |
| **குறிப்பு - 04.2 - பணியாளர் கடன்படுனர்** | | | |
| பண்டிகை முன்பணம் | | 163,125 | 25,000 |
| பணியாளர் கடன் | | 579,397 | 1,453,400 |
| பணியாளர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய ஏனையவை | | 184,366 | 112,320 |
| பணியாளர் காப்பீடு | | 873,778 | 223,102 |
| | | **1,800,666** | **1,813,822** |
| **குறிப்பு - 04.3 - திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகைக** | | | |
| வைப்பு - புதிய கட்டிடம் | | 4,050,000 | 4,050,000 |
| வைப்பு - இராஜகிரிய காரியாலயம் | | 1,120,000 | 1,120,000 |
| வைப்பு - எரிபொருள் | | 300,000 | 300,000 |
| வைப்பு - வாகனம் | | 5,000 | 5,000 |
| வைப்பு - டென்டர் | | 91,100 | 54,100 |
| வைப்பு - நீர் | | 15,000 | 15,000 |
| | | **5,581,100** | **5,544,100** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| குறிப்பு | 2023.09.30 ரூபா. | 2022. 12.31 ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு - 05 - முன்பணம் மற்றும் ஏனைய வரவுகள்** | | |
| **முன்பணம்** | 2,189,509 | 2,148,332 |
| | **2,189,509** | 2,148,332 |
| **குறிப்பு - 06 - பணத்திற்கு சமமானவை** | | |
| இலங்கை வங்கி - கணக்கு இலக்கம். 2323299 | 502,824 | 880,486 |
| இலங்கை வங்கி - சேமிப்பு கணக்கு இலக்கம் 2329765 | 26,033 | 93,963 |
| மக்கள் வங்கி - (நடமாடும்) கணக்கு இலக்கம் 200100130005980 | 1,216,571 | (5,532,427) |
| மக்கள் வங்கி சேமிப்பு கணக்கு இலக்கம் 200200110005980 | 2,390,449 | 18,699,530 |
| நுண் பணம் | 50,000 | - |
| | **4,185,876** | **14,141,553** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு - 07 - கொடுப்பனவுகள்** | | |
| இருப்பு | 18,092,000 | 17,638,518 |
| ஆண்டிற்கான உதவித் தொகை | 623,185 | 1,426,268 |
| | 18,715,185 | 19,064,786 |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (4,899,921) | (972,786) |
| **கொடுப்பனவுகள்** | **13,815,264** | **18,092,000** |
| **குறிப்பு - 08 - வியாபாரம் மற்றும் செலுத்த வேண்டிய ஏனைய செலவு** | | |
| **வியாபார கடன் கொடுத்தவர்கள்** | 222,939,260 | 177,326,059 |
| தொலைபேசி கட்டணம் | - | 47,303 |
| செலுத்த வேண்டிய விற்பனை கமிஷன் | 444,772 | 581,475 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை கட்டணம் | 7,850 | 8,925 |
| செலுத்த வேண்டிய முற்பணம் | 32,453,353 | 32,545,718 |
| செலுத்த வேண்டிய வீட்டு வாடகை | - | 900,000 |
| பிற கடனாளிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் | 6,828,312 | 9,692,862 |
| சேர்க்கப்பட்ட வரி | 205,000 | - |
| எரிபொருள் | - | 41,651 |
| ஊதிய கட்டுப்பாட்டு கணக்கு | 147,037 | 140,580 |
| தற்செயல் கணக்கு | - | 10,353 |
| கட்டுப்பாட்டு கணக்கு - Vision 2020 President Secretariat | 616,896 | 616,896 |
| திரட்டப்பட்ட செலவுகள் - **குறிப்பு** 08.01 | 6,675,834 | 35,391,700 |
| மீள்பெறக்கூடிய வைப்புத்தொகைகள் | 70,000 | 70,000 |
| | **270,388,313** | **257,373,524** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2023.09.30<br>ரூபா. | 2022.12.31<br>ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு - 08.1 -** திரட்டப்பட்ட செலவுகள் | | |
| கண்காய்வு கட்டணம் | 581,150 | 616,896 |
| பணியாளர் வருங்கால வைப்பு நிதி | 24,233 | - |
| முதலாளியின் அறக்கட்டளை நிதி | 3,163 | - |
| பணியாளர் ஊதியம் வழங்கப்படும் | 285,819 | - |
